திரித்துவக் குடும்ப மாதாந்திர மலர்

தனிச்சுற்றுக்கு மட்டும்

# திரித்துவச்சுடர்

ஏப்ரல் 2024

holytrinityggnagar.com YouTube: Trinity Ripples




## திருத்தந்தையின் மன்றாட்டுக்கருத்து



உலகின் அனைத்து கலாச்சாரத்திலும், பெண்களின் கண்ணியம் மற்றும் மகத்தான பங்களிப்பு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும், உலகின் பல்வேறு பகுதிகளில் அவர்கள் அனுபவிக்கும் பாகுபாடுகளின் கொடுமை முடிவுக்கு வரவும் நாம் மன்றாடுவோம்.

We pray that the dignity and immense value of women be recognized in every culture, and for the end of discrimination that they experience in different parts of the world.

## அன்பிய இறைவார்த்தை ஏப்ரல்

**1 பேதுரு 1: 3-5**

## பங்கின் இலக்கு

**PARISH VISION STATEMENT**

தூய தமத்திரித்துவ பங்கு மக்களாகிய நாங்கள் இயேசுவின் சீடர்களாக, அருள் வாழ்வின் குழுமமாக, திருவழிபாடு, அருட்பணி, அனைவரையும் உள்ளடக்கிய பணிகளின் வழியாக இயேசுவின் கனவான இறையாட்சியை இம்மண்ணில் கட்டியெழுப்ப அழைக்கப்பட்டுள்ளோம்.

WE THE PEOPLE OF HOLY TRINITY PARISH AS A COMMUNITY OF DISCIPLES OF JESUS CHRIST ARE CALLED TO BUILD HERE ON EARTH THE KINGDOM OF GOD, THE DREAM OF JESUS CHRIST THROUGH LITURGY AND INCLUSIVE PASTORAL MINISTRIES.

## பங்குத் தந்தையின் செய்தி

தூய தமத்திரித்துவத்தின் இடைவிடாத கண்காணிப்பில் வாழும் எனது அருமையான சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளும், இறை ஆசீரும். மார்ச் மாதம் முழுவதும் தவக்காலத்தை மிகச் சிறப்பாக பல நிலைகளில் கடைபிடித்தோம். நல்ல பல ஆன்மீக தயாரிப்புகளை மேற்கொண்டு ஆன்மீக வாழ்வில் நல்ல முன்னேற்றம் பெற்று இருப்போம் என்று நம்புகிறேன்; கடவுளுக்கு நன்றி!

“கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” – (1கொரி:15:14) உயிர்த்த ஆண்டவருடைய வல்லமை நம் அனைவரையும் புதிய மாற்றத்திற்கு அழைக்கிறது. பயந்திருந்த பேதுருவை பெந்தேகோஸ்தே நாளன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் முன் “ஆண்டவர் உயிர்த்தெழுந்தார். நாங்களே சாட்சிகள்” (தி.பணி 2:32) என துணிவோடு பறைசாற்ற உத்வேகம் அளித்தது. அவர் நிழல் பட்டாலும் புதுமைகள் நடந்தேறின. பலவிதமான எண்ணங்களோடு இருந்த திருத்தூதர்களை உயிர்ப்பின் வல்லமை வீரர்களாக மாற்றியது. இரண்டாயிரம் ஆண்டு கிறிஸ்தவ வரலாற்றில், கோடானகோடி மக்கள் கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பின் வல்லமையால் தங்களது வாழ்வில், வியத்தகு முறையில் மாற்றங்கள் அடைந்து உள்ளனர். நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இம்மாபெரும் வல்லமையை நாம் தாங்கி உள்ளோம் என்பதை உணர்ந்து. உயிர்ப்பின் வல்லமையை ஒவ்வொரு நாளும் வாழ வாழ்த்துகிறோம்.

**My dear brothers and sisters! May the power of the Holy Trinity bless you and keep you safe. We all had a meaningful preparation during lent for Easter and celebrated the resurrection of Jesus with great joy. "If Christ had not been raised alive, the gospel we preached and the faith you have will be meaningless". (1Cor:15:14). The resurrection of Jesus is all about transformation. It transformed Peter, a boastful coward into a mighty orator, who on Pentecostal day preached in front of tens of thousands to profess his faith in Jesus. "The Lord is risen. We ourselves are witnesses" (Acts 2:32). The power of life transformed the disciples, who had many different thoughts, into warriors. Since then, down the centuries, thousands of ordinary men and women turned the world upside down. The Risen Christ is an active, living reality. Today we carry the power of the Resurrected Lord with us wherever we go. God Bless you all.**

உங்கள் அன்பு பங்குப் பணியாளர்
பீட்டர் தும்மா

# மார்ச் மாத நிகழ்வுகள்

## 1, 2, 3 தவக்கால தியானம்

மார்ச் 1, 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில், தவக்கால தியானம் மிக சிறப்பாக நடைபெற்றது. மாதா தொலைக்காட்சியின் நிர்வாக அருள் தந்தையர்கள் மற்றும் அவர்களின் குழுவினரால் வெள்ளி மற்றும் சனிக்கிழமையன்று மாலை 6.00 மணியிலிருந்து 9.00 மணி வரையிலும் ஞாயிறுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 1.00 மணி வரையிலும் வழி நடத்தப்பட்டது. இத்தியானத்தின் வழியாக பலரும் இறை அனுபவத்தைப் பெற்றனர். ஒவ்வொரு நாளும் தியானம் முடிந்த பிறகு அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

**Lenten retreat in Tamil was conducted by Madha TV team on March 1,2 and 3. On Friday and Saturday (6 to 9 p.m) and on Sunday (8 a.m. to 1 p.m.). Through this retreat many gained spiritual experience. Food was served on all days.**

## 8, 9, 10 தவக்கால திருப்பயணம்

மார்ச் மாதம் 8, 9, 10 ஆகிய தேதிகளில் தவக்கால திருப்பயணமாக புனித தேவசகாயம் தொடர்புடைய திருத்தலங்களையும் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள முக்கியமான சில ஆலயங்களையும் பார்வையிட்டு வழிபட்டோம். கோட்டாறு மறைமாவட்ட ஆயர் நசரேன் அவர்களை சந்தித்தோம். தவக்கால திருப்பயண குழுவினர் மிகச் சிறப்பாக திட்டமிட்டு முன் ஏற்பாடுகளை செய்து மிக நல்ல முறையில் திருப்பயணத்தை முடித்து தந்தனர். பங்கு எடுத்த அனைவரும் நல்ல ஒத்துழைப்பை நல்கினர்.

**The Lenten pilgrimage to Nagercoil and Trivandrum, mostly places connected to St. Devasagayam on March 8,9 and 10 was a great spiritual experience. The team also visited some important churches in Trivandrum. The pilgrimage organising committee had meticulously planned and executed the trip successfully, of course with the cooperation of the participants.**

## 10 ஆங்கிலத்தில் தியானம்

மார்ச் 10 ஆம் தேதி ஆங்கிலத்தில் தியானம் ஏற்பாடு செய்யப்பட்டது. காலை 10.30 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை இளைஞர்களுக்கும், அதைத் தொடர்ந்து மதியம் 2.00 மணியிலிருந்து மாலை 5.15 வரை பொது நிலையினர் அனைவருக்கும், பிறகு அதைத் தொடர்ந்து திருப்பலியும் ஏற்பாடு செய்யப்பட்டது. திரு இருதய சபையை சார்ந்த அருள்தந்தை மைக்கில் அகஸ்டின் SCJ, இந்த தியானத்தை சிறப்பாக வழி நடத்தினார். இதற்காக நல்ல முறையில் ஏற்பாடு செய்தவர்கள் நம் பங்கின் ஆங்கில வழிபட்டுக் குழுவினர். பல பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**The Lenten Retreat in English was held on March 10 from 10.30 a.m to 1 p.m. for the youth and from 2 p.m to 5.15 p.m.for the others, followed by mass at 5.30 p.m. Rev. Fr. Michael Augustine, SCJ of the Congregation of the Sacred Heart conducted the retreat. Many parishioners attended and a big thanks to the members who organised it.**





## 16 மறைக்கல்வி ஆண்டு

2023–2024 ஆண்டுக்கான மறைக்கல்வி ஆண்டு விழா, மார்ச் 16 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. நமது மறைக்கல்வி குழுவினர் சீரிய திட்டமிட்டு வகுப்புகளையும், செயல்பாடுகளையும் உருவாக்கி, நம் பிள்ளைகளை உற்சாகத்தோடு வைத்திருந்தனர். ஒவ்வொருவரும் தங்களுக்கு தரப்பட்ட பணியை நேர்த்தியாக செய்தனர். நமது பெற்றோர்களும் பங்கு மக்களும் நல்ல ஒத்துழைப்பை நல்கினர். ஆண்டு விழா அன்று பல அருமையான கலை நிகழ்ச்சிகளும், பிள்ளைகளை உற்சாகமூட்ட பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

**The annual Catechism Day was celebrated on March 16. The organising team had planned various programs that kept the children excited. Prizes were distributed to the winners of various competitions held throughout the year. After the function, dinner was served to all.**

## 18 மகளிர் நாள் கொண்டாட்டம்

மார்ச் 18 ஆம் தேதி திங்கட்கிழமை மகளிர் நாள் நமது பங்கில் “சிங்கப் பெண்களே” என்ற தலைப்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்பிய பெண்கள் பொறுப்பாளர்கள் முயற்சி எடுத்து கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். சிறு விளையாட்டும் நடத்தப்பட்டது. உற்சாகத்தோடு இவ்விழாவில் அனைத்து மகளிரும் மற்றும் பங்கு மக்களும் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளின் வழியாக பெண்களுக்கு நம்பிக்கை தரும் வண்ணம், முன்னேற்றம் தருகின்ற பல நல்ல கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. பேராசிரியர் முனைவர் சுதா ஜான் பிரிட்டோ சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

**The Women's Day celebrations organised by our church BCC women's group was held on March 18 (Monday). Along with the women, other parishioners also took part with great enthusiasm. A lot of good ideas were shared to build confidence and boost women empowerment. Prof. Dr. Sudha John Britto was invited as the special guest.**



## 24 இரத்ததான முகாம்

நமது பங்கில் குருத்து ஞாயிறு அன்று 24. ஆம் தேதி இரத்த தான முகாம் நமது இளைஞர்களால் நடத்தப்பட்டது. இதில் 33 பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தார்கள். இதில் கலந்துகொண்டவர்களுக்கும், இளைஞர்களுக்கும், மற்றும் மருத்துவ குழுவினர்களுக்கும், எமது நன்றிகளையும், பாராட்டுகளையும், தெரிவித்து கொள்கிறோம்.

**On Palm Sunday (March 24) our parish youth group organized a blood donation camp. 33 parishioners donated blood. We sincerely thank and appreciate the donors, youth group, doctors and nurses.**

# உயிர்ப்பு பெருவிழாவின் மகிமை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறைமகன் இயேசு உயிர்ப்பு அடையவில்லையென்றால், மறைநூல்கள், இயேசுவின் பணி மற்றும் அவரது போதனைகள் அனைத்தும் ஒரு காவியமாகத்தான் இருந்திருக்கும். உலகில் இன்று பின்பற்றப்படும் மற்ற சமயங்கள் மற்றும் அதன் தலைவர்களில் ஒருவராகவே இயேசுவும் அடையாளம் காணப்பட்டிருப்பார். இயேசு கிறிஸ்து உயிர்ப்பு அடையவில்லையென்றால் நீங்களும் நானும் இன்று கிறிஸ்துவின் பிள்ளைகளாய், அவரில் ஒருமித்த உடன் பிறந்தவர்களாய் இருந்திருக்க மாட்டோம். எனவேதான் ஈஸ்டர் எனப்படும் கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா, நம் கிறிஸ்துவத்தில் முதல் இடத்தை பிடிக்கின்றது. கிறிஸ்து பிறப்பு விழாவைக்காட்டிலும், இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா கூடுதலான உட்பொருளும் மாட்சியும், மகிமையும் பொருந்தியது.

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு எனும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயின, உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை. அவரிடம் வாழ்வு இருந்தது; அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. இந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றிகொள்ளவில்லை" – யோவான் நற்செய்தியின் தொடக்கத்தில் நம் வாசிக்கும் முன்னுரைப்பாடலில் கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மை உள்ளதை நாம் உணரலாம். இந்த பகுதியை ஒவ்வொருமுறை படித்து தியானிக்கும் போதும், நம் உள்ளத்தில் எழும் நம்பிக்கையும், உற்சாகத்தையும் சொல்லில் அளவிட முடியாது. நம்பிக்கையின் அடையாளமாக, ஊற்றாக திகழும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நம் அனைவருக்கும் புத்துணர்வையும், புது வாழ்வையும் தருவதாக.

# பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024

தமிழ்நாட்டில் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதியன்று நடக்கவிருக்கும் பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வாக்குரிமை உள்ள அனைவரும் வாக்களிக்க கடமைப்பட்டு உள்ளோம். சிற்றூர்கள், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள் மற்றும் கல்லூரிகளில் படிக்காத சாமான்யர்களிடம் காணப்படும் வாக்களிக்கும் ஆர்வம், பெரு நகரங்கள், பொருளாதாரத்தில் நடுத்தர மற்றும் தன்னிறைவு உடையவர்கள் மற்றும் உயர் படிப்பு படித்தவர்களிடம் இல்லை என்பதை கடந்த காலங்களில் நாம் கண்கூடாக பார்த்து உள்ளோம். முறையான கல்வி அறிவு இல்லாதா வாக்காளர்கள், சீர்தூக்கி பார்க்கும் திறன் குறைவு உடையவர்களாய் உள்ளனர். இப்படியான மக்களை, தங்களின் பணபலம் மற்றும் தந்திரமான பரப்புரைகளால் அரசியல் கட்சிகள் ஏமாற்றுவது எளிதாக உள்ளது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் சமயம், சாதியம் மற்றும் இன பாகுபாடு உணர்வுகளை தூண்டிவிட்டு, உயர் படிப்பு படித்தவர்களைக்கூட மூளை சலவை செய்து தங்களின் கள்ள நாடகத்திற்கும், திட்டமிட்ட கொள்ளைகளுக்கும் துணைபோக வைக்கின்றனர்.

நம் நாட்டின் இறையாண்மையையும், அரசியல் சட்டத்தையும், வேற்றுமையில் ஒற்றுமை எனும் பன்முகத்தன்மையையும் மதித்து சமய, சாதிய, இன பாகுபடின்றி நற்பணி ஆற்றக்கூடியவர்கள் யார் என அறிந்துகொள்ளும் திறன் படைத்த நாம் அனைவரும், இந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வாக்களித்து நம் பங்கினை முன்வழங்குவோம். சிறுதுளி பெருவெள்ளம் எனும் பழமொழிக்கு ஏற்ப மாற்றம் நம்மிடத்தில் இருந்து தொடங்கட்டும்.

**It is the bounden duty of everyone to cast their vote in the upcoming Parliamentary General Elections to be held in Tamil Nadu on April 19. It has been witnessed in the past, that unlike the interest shown by voters from small towns, economically weaker sections and first time voters, voters from the cities and economically stronger public do not show much interest in exercising their voting rights. With improper education it has become easy for political parties to fool voters with their money power and crooked thinking.**

**All of us have the ability to know who can do good without discrimination of religion, caste and ethnicity, respecting the sovereignty and constitution of our country. Let us all do our part by voting in this Parliamentary general election. Let the change start from us as the saying goes, little drops make a mighty ocean.**

# தவக்கால நிகழ்வுகள்

பிப்ரவரி மாதம் 14 தேதியிலிருந்து மார்ச் இறுதி வரை தவக்காலம் மற்றும் புனித வாரத்தை கடந்து வந்துள்ளோம். இந்த காலத்தில், திருப்பலிகள், செபமாலை, ஒப்புரவு அருட்சாதனம், சிலுவைப் பாதை, இறை வார்த்தை வாசிப்பு, தியானம் இன்னும் பலவிதமான தியாக முயற்சிகள் வழியாக ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழாவிற்க்கு நல்ல தயாரிப்பில் ஈடுபட்டோம். இவை அனைத்தையும் பல குழுக்கள் நல்ல முறையில் திட்டமிட்டு நமது பங்கு குடும்பம் ஆன்மிகத்தில் தலைசிறந்து விளங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

தவக்காலத்தில் ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக, தவக்கால தியாக உண்டியலை ஒவ்வொரு குடும்பத்திற்கும் அளித்தும், புனித வின்சென்ட் தே பால் சபை வழியாக ஏழை குடும்பக்களுக்கு அரிசியை பகிர்ந்து கொள்கின்ற நிகழ்வும் சிறப்பாய் ஏற்பாடு செய்யப்பட்டது. பலரும் தியாக உள்ளத்தோடு, இந்த அன்பின் செயல்பாட்டில் உங்களை இணைத்துக் கொண்டு உதவி உள்ளீர்கள். அனைவரையும் நன்றி உள்ளத்தோடு பாராட்டுகிறோம். உயிர்த்த ஆண்டவரிடத்தில் மன்றாடுகிறோம்.

**From Ash Wednesday (Feb 14) till the end of March we had the lenten season. During this period, we prepared for the celebration of the Lord's resurrection through Masses, the Rosary, the liturgy of reconciliation, the Stations of the Cross, the reading of God Word, retreats and much more. With gratitude we thank all those who helped us for these events. God Bless you all.**

**In order to help the poor, a dumb box sacrificial collection from every family was organised and the Vincent de Paul Society distributed rice to the poor families. Your act of love and generous contribution is highly appreciated.**

# ஈஸ்டர் நல் வாழ்த்துக்கள்

அனைவருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் அனைவரும் கடவுளின் அன்புக்கும், மாட்சிக்கும் சாட்சிகளாய் வாழ்வோம். அல்லேலூயா.

**Happy Easter! May this beautiful season be a testimony to God's love and glory "He is not here: He has risen!" (Luke 24:6) Alleluia.**



# உயிர்த்த ஆண்டவரின் குடும்பங்களுக்கான ஆசீர்

உயிர்த்த ஆண்டவரின் குடும்பங்களுக்கான ஆசீர்: நமது கத்தோலிக்க பாரம்பரியத்தில் உயிர்ப்பின் விழா முடிந்த பிறகு நமது குடும்பங்களை ஈஸ்டர் பெருவிழாவில் மந்திரிக்கப்பட்ட புது தண்ணீர் கொண்டு ஆசீர்வதிக்கிறோம். ஏப்ரல் மாதம் முழுவதும் நமது பங்குத் தந்தை மற்றும் உதவி பங்குத்தந்தை அன்பியங்கள் வழியாக நம் வீடுகளை சந்தித்து உயிர்ப்பின் ஆசீர்வாதங்களை வழங்குவார்கள். இதற்கான தேதிகள் அன்பிய பொறுப்பாளர்கள் வாயிலாக தெரியப்படுத்தியுள்ளோம். முடிந்தவரையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இந்த ஆசீர்வாதத்தில் கலந்து கொள்ளும்படியாக கேட்டுக்கொள்கிறோம்.

**There is a meaningful practice in our Catholic church to impart Easter blessing to every family using water blessed during the Easter Vigil service. In April priests from our parish will visit families. As far as possible all the members of the family are requested to be present. The dates are already intimated through your respective Anbiyam members.**

# திருவழிபாட்டு நாட்கள்

**ஏப்ரல் 7: பாஸ்கா 2ஆம் வாரம் – ஞாயிறு**
திபணி: 4: 32–35, திபா 118: 2–4. 16ab–18. 22–24,
1 யோவா: 5: 1–6, யோவான்: 20: 19–31

**ஏப்ரல் 8: கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழா**
எசா: 7: 10–14, 8: 10b திபா 40: 6–7a. 7b–8. 9. 10,
எபி: 10: 4–10, லூக்கா: 1: 26–38.

**ஏப்ரல் 11: புனித தனிஸ்லாஸ் – ஆயர், மறைசாட்சி**
திருவெளிப்பா: 12: 10–12a,
திபா 34: 1–2. 3–4. 5–6. 7–8, யோவான்: 17: 11b–19

**ஏப்ரல் 13: புனித முதலாம் மார்ட்டின் – திருத்தந்தை, மறைசாட்சி**
2 திமொத்தேயு: 2: 8–13; 3: 10–12,
திபா 126: 1–2ab. 2cd–3. 4–5. 6, யோவான்: 15: 18–21

**ஏப்ரல் 14: பாஸ்கா 3ஆம் வாரம் – ஞாயிறு**
திருப்பணி: 3: 13–15, 17–19, திபா 4: 1. 6. 8, 1
யோவான்: 2: 1–5, லூக்கா: 24: 35–48

**ஏப்ரல் 21: பாஸ்கா 4ஆம் வாரம் – ஞாயிறு**
திருத்தூதர் பணிகள்: 4: 8–12
திபா 118: 1, 8–9. 21–23. 26, 28, 29,
யோவான்: 3: 1–2, யோவான்: 10: 11–18

**ஏப்ரல் 23: புனித ஜார்ஜ் – மறைசாட்சி வி.நினைவு**
திருவெளிப்பாடு: 21: 5–7,
திபா 126: 1–2ab. 2cd–3. 4–5. 6, லூக்கா: 9: 23–26

**ஏப்ரல் 25: புனித மாற்கு – நற்செய்தியாளர் விழா**
1பேதுரு: 5: 5b–14, திபா 89: 1–2. 5–6. 15–16,
மாற்கு 16: 15–20

**ஏப்ரல் 28: பாஸ்கா 5ஆம் வாரம் – ஞாயிறு**
திருத்தூதர் பணிகள்; 9: 26–31,
திபா 22: 25b–26. 27, 29. 30–31,
1யோவான் 3: 18–24, யோவான்: 15: 1–8

**ஏப்ரல் 30: புனித ஐந்தாம் பயஸ் – திருத்தந்தை (வி.நினைவு)**
1கொரி: 4: 1–5, திபா 110: 1. 2. 3. 4,
யோவான்: 21: 15–17

## நமது பங்கின் மார்ச் மாத அருட்சாதன நிகழ்வுகள்

### திருமுழுக்கு

- ஆல்வின் மாற்கு
- மணிகண்டன்
- ஜெர்னிஷ் டேனியல்
- கிஷோர் குமார்

வரவேற்கிறோம்



### நற்கருணை மற்றும் உறுதிபூசுதல்

- கிஷோர் குமார்
- பென்சி சுரேஷ்

# உலக நாட்கள் - ஏப்ரல் 2024

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 1 | : | உலக பால் நாள் |
| ஏப்ரல் 5 | : | உலக சுற்றுசூழல் நாள் |
| ஏப்ரல் 12 | : | உலக வான் பயண நாள் |
| ஏப்ரல் 9 | : | பாதுகாப்பான இணைய நாள் |
| ஏப்ரல் 13 | : | ஜாலியன் வாலாபாக் நினைவு நாள் |
| ஏப்ரல் 18 | : | உலக பாரம்பரிய நாள் |
| ஏப்ரல் 21 | : | இந்தியா குடிமைப் பணிகள் நாள் |
| ஏப்ரல் 22 | : | புவி நாள் |
| ஏப்ரல் 23 | : | உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை நாள் |
| ஏப்ரல் 24 | : | இந்திய பஞ்சாயத்து நாள் |
| ஏப்ரல் 25 | : | உலக மலேரியா நாள் |
| ஏப்ரல் 2 | : | அறிவு சார் சொத்து குறியீடு நாள் |
| ஏப்ரல் 29 | : | உலக நடன நாள் |

# திரித்துவச் சுடர்

## விளம்பரதாரர்களுக்கு நன்றி

நமது பங்கில் நடைபெறும் நிகழ்வுகளை, திரித்துவச்சுடர் மாதாந்திர மலர் வழியாக அச்சிட்டு வழங்குவதற்கு, கடந்த ஓர் ஆண்டு முழுவதும் நமக்கு விளம்பரங்கள் தந்து உதவிய தொழில் முனைவர்களுக்கு நம் பங்கு மக்களின் சார்பாகவும், ஆசிரியர் குழுவின் சார்பாகவும், நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இறைவன் உங்கள் அனைவரின் தொழிலையும், குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

## நம் உயர் மறை மாவட்டத்தின் புதிய குருக்கள்

ஏப்ரல் 7 ஆம் தேதி இறை இரக்க ஞாயிறு அன்று நமது புனித தோமையார் சாந்தோம் பேராலயத்தில் மாலை 5:30 மணிக்கு நமது உயர் மறை மாவட்டத்திற்கான புதிய குருக்களின் அருட்பொழிவு நிகழ்வு நடைபெற உள்ளது. இந்த ஆண்டு நமக்கு இறைவன் நான்கு புதிய குருக்களைத் தருகின்றார். இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். முடிந்தவர்கள் இந்த திருப்பலியில் கலந்து கொள்வோம். புதிய குருக்களுக்காக அனைவரும் மன்றாடுவோம்.

**On April 7, Divine Mercy Sunday, there is ordination for four new priests at the Santhome Cathedral at 5.30 p.m. Please pray for the new priests and if possible attend the ordination mass.**

## பிஞ்சிவாக்கம் பங்கு மக்களின் தவக்கால திருப்பயணம்

மார்ச் 17 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை, திருவள்ளூர் அருகாமையில் உள்ள பிஞ்சிவாக்கம் பங்கில் வசிக்கும் 110 விசுவாசிகள் அவர்களது பங்கு தந்தை, அருள்சகோதரர்கள் மற்றும் அருள்சகோதரியின் வழிநடத்தலில், நமது ஆலயத்தில் தவக்கால திருப்பயணம் தொடர்பான சிலுவைப்பாதை செய்ய வந்தனர். அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களுடன் மன்றாடினோம். நம் பங்கின் சார்பில் திருப்பயணிகள் அனைவருக்கும் மோர் வழங்கி, நல்ல முறையில் வழி அனுப்பிவைத்தோம்.

**On March 17 (Sunday), 110 parishioners from Pinjivakkam near Thiruvallur visited our church and conducted the Way of the Cross. The Parish priest, brothers and sisters also joined. After the prayer buttermilk was served.**





## உலக குழந்தைகள் நாள்

நமது திருத்தந்தை பிரான்சிஸ் மார்ச் 2ஆம் தேதி அறிவித்ததின்படி கத்தோலிக்க திருஅவையின் முதல் உலக குழந்தைகள் நாள் மே மாதம் 25, 26 தேதிகளில் உரோமை நகரில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வின் வழியாக இவர்கள் மத்தியில் ஒற்றுமை வளரவும், புதிய உலகை உருவாக்க தேவையான பண்புகளை வளர்க்கவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகிறது. நமது பங்கு சிறுவர்களை புதியதொரு உலகினை உருவாக்கும் செயல்பாடுகளில் ஊக்கப்படுத்துவோம்.

**As announced by Pope Francis on March 2, the first World Children's Day will be held on May 25 and 26 in Rome. The event is organised to develop unity and better qualities among children. We too will promote these values in our parish children for a better world.**



மாதா தொலைக்காட்சி அருட்தந்தையர்கள்
வழி நடத்திய தவக்கால தியானம்



தவக்கால திருப்பயணம் – புனித தேவசகாயம் ஆலயம்
மற்றும் திருவனந்தபுரம் ஆலயங்கள்



மறைக்கல்வி ஆண்டுவிழா 2024



நமது பங்கின் இளையோரின் முயற்சியில்
குருதிக் கொடை



நற்கருணை இடமாற்ற திருப்பவனி



மலர்களும் மனங்களும் இணைந்து நற்கருணை
ஆண்டவரை மகிமைப்படுத்திய தருணம்



பாதம் கழுவும் சடங்கில் நம் பங்குத்தந்தை



திருச்சிலுவை ஆராதனை நிகழ்வில் பங்குமக்கள்
பக்தியோடு கலந்து கொண்டனர்



இன்னுயிர் அகன்றது உமை விட்டு,
பூமி இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு!




எனக்காக இறைவா எனக்காக, இடர்பட வந்தீர் எனக்காக!


Arockia Sagayaraja A
Managing Director
Saffrawn
Facility Solutions Pvt Ltd.
Our Services
Housekeeping Services
Corporate Cleaning Services
Pest Control
Hotel & Restaurant Services
No.109 Padikuppam Main Road, Kamaraj Nagar, Anna Nagar West, Chennai-600040
Mail: saffrawnfacility@gmail.com Contact No.7823979791/9841892656
WWW.SAFFRAWN.IN


SONA COATING PVT. LTD.
Plot No. 2, Nithiyam Kamal, Spartan Nagar, Mugappair (East)
89396 56698 / 99419 58212 | Email: sonacoatingpvtltd@gmail.com
C SANTHOSH
www.sonacoating.in


YAHWEH PITSTOP
We Innovate Mobility
Address: No.84, 1st Main Road, Eri Scheme, Mogappair East, Ch-37.
Our Services:
Tyres
Wheel Alignment
Wheel Balancing
Puncture
Nitrogen
Foam Wash
Polishing & Detailing
Accessories
Sun Film
Seat Cover
Floor Mat
99405 21630 98409 15347
Door Step Assistance & Delivery


ROY ENGINEERINGS
ROY ENGINEERINGS
MOB: 9444911378 / 9600142309
Hexagon Nut
Thread Coupling
Worm Gear
VMC Tool Catcher
Helical Gear
VMC Atc Arm
Gear Shaft
Bevel Gear
Aluminium Flange
PB Worm Gear Shaft
PB Nut
Brass Gear Shaft
Spur Gear
Nylon Bush
PB Spur Gear


EICQU
STUDY ABROAD
& VISA
10+ COUNTRIES
100+ UNIVERSITIES
CONTACT US
08270871090
5th Floor, Awfis, Uthamar Gandhi Rd, opp. The Park Hotel, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034
More Information : www.eicqu.com


RAMESH
HARDWARES
DR. FIXIT
WATERPROOFING EXPERT
asianpaints
FinOlex
PIPES
Asian Paints | Sanitary Wares | Pipes
Fitting Godrej Locks | Welding Googs
Valaiyapathy Salai, Mogappair East
Mob: 79043 88322


WIGEON TOWERS
Property Developers
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
AISHWARYA AVENUE -1
Podavur Village kanchipuram,
Near Parandur
MADHAVARAM
Vadaperumbakkam
Perungavur-2
Chennai 600 103
SUMATHI AMMAL NAGAR
Oragadam Junction
Kunnavakkam
Kancheepuram District
R. Ramesh Babu
Manager
98849 88340
Layout only
Ph No: 044-4851 5365, 044-4767 1228


WIGEON
TECHNOLOGIES
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
Mfrs.of Jigs & Fixtures,
Press Tools & Machine
Spare Jig Boring
& Fabrication job works
No: 74/9, Periyar 5th cross street, Srinivasa Nagar, Padi
Ph no: 044- 26252333
Mail Id: wigeontech12@gmail.com


YOUR EASY AND FASTEST WAY OF GROCERY SHOPPING
SHOP NOW
ABEL
GROCERY STORE
Natural product with great price
SUPER SALE
44/20, Nehru Nagar, 1st street, Ambattur, Chennai - 600053
FOR MORE INFORMATION, CONTACT
ABEL MALIGAI MANDI - 9940172355
WHATSAPP ORDER FOR DOOR DELIVERY


R. INBARAJ
Proprietor
M: 9382139151
Manpower / staffing (Regular & Contractual)/ all the HR allied services
ROYAL ASSOCIATES
Placement & Consultants
(ISO 9001:2015 Certified Company)
3/475 Valayapathi Salai, Mugappair East, Chennai 600 037.
Tel: 26561970 Email: royalcorporate@gmail.com. www.royalassociates.co


NEWALL ENGINEERING WORKS
Mfrs of Cutting Tools &
Precision Engineering Components
M: 99401 54897, 98400 54817
www.newallengg.in